# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 158/ந/2019**

**நாள் : 18/02/2020**

**திருமதி M. நிர்மலா,**
**இராணிப்பேட்டை.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**இராணிப்பேட்டை நகராட்சி..** – **எதிர் மனுதாரர்**

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், இராணிப்பேட்டை, பாரிநகர், இரண்டவது தெரு, 22/9 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி M. நிர்மலா அவர்களின் மனு இம்முறைமன்ற ,நடுவத்தில் பெறப்பட்டு 158/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது நகராட்சி ஆணையர் அளித்த விளக்கம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், இராணிப்பேட்டை, பாரிநகர், இரண்டவது தெரு, 22/9 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி M. நிர்மலா என்பவர் தனது வீட்டிற்கு அருகே அமைக்கப்பட்ட கழிவுநீர்க்கால்வாய் முறையாக அமைக்கப்படாததால் வீட்டிற்கு முன்பாக கழிவு நீர் தேங்குவதாகத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில மனுதாரரின் வீடு 30 மனைகள் கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ளது என்றும், அம்மனைப்பிரிவில் தனித்த மனைகளாக குறைந்த அளவு மனைகள் மட்டுமே வரன்முறைப் படுத்தப் பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். மேலும், அம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார். மனுதாரரின் வீடு அமைந்துள்ள தெருவில் கழிவு நீர் கால்வாய் அமைக்கப்பட்டு அக்கழிவு நீர் தேவேந்திரன் ஈஸ்வரன் கோவில் நிலத்தின் காலி

இடத்தில் செல்கிறது என்று தெரிவித்து, கோவில் நிர்வாகத்தின் அனுமதி பெற்று வடிகால்வாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தனது அறிக்கையில் ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

3. நகராட்சி ஆணையரிடம் 10.12.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தனது அறிக்கையில் சமர்ப்பித்த விவரங்களை விசாரணையின் போது ஆணையர் உறுதி செய்தார். எனினும், கழிவு நீர் தேங்குவது குறித்து கள ஆய்வு மேற்கொண்டு கோயில் நிர்வாகத்திடம் கலந்து பேசி உரிய தீர்வு காணப்படும் என்று விசாரணையின் போது உறுதி அளித்தார். விசாரணை நாளுக்குப் பின்னர் ஆணையர் கள ஆய்வு செய்து 21.01.2020 நாளிட்ட கடிதத்தில் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். கழிவு நீர் கோவில் நிலம் வழியாக செல்வதற்கு வடிகால்வாய் அமைத்திட இந்து அறநிலையத் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதென்றும், மேற்படி துறையின் இசைவினைப் பெற்றவுடன் வடிகால்வாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

4. மனுதாரரின் வீடு அமைந்துள்ள மனை அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ளதாகத் தெரிகிறது. முறையீட்டு மனுதாரரின் வீட்டின்முன் அமைக்கப்பட்ட வடிகால்வாயிலிருந்து கழிவு நீர் கோவிலுக்குச் சொந்தமான நிலம் வழியாக செல்ல வேண்டியுள்ளதால் இந்து அறநிலையத் துறையின் அனுமதியினைப் பெற்று வடிகால்வாய் அமைத்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இராணிப்பேட்டை நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப் படுகிறது.

2020–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

25/2/2020

பெறுநர்.

1. திருமதி M. நிர்மலா,
எண்.22/9 A, பாரி நகர், இரண்டாவது தெரு,
இராணிப்பேட்டை, வாலாஜா வட்டம்,
வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
இராணிப்பேட்டை நகராட்சி,
இராணிப்பேட்டை..

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி